


# THE BOYHOOD OF SRI KRISHNA

BY

A. S. Bharathi

# பால கோபால லீலை

வரகவி - திரு. அ. சுப்பிரமணிய பாரதி
எழுதியது

*Approved by the Text-Book Committee, Madras.*

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி
ஜார்ஜ் டவுன், சென்னை

காபிரைட்]

[விலை அணா

5943a

**APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE**

*Vide Fort St. George Gazette, Page 478,*

*Dated 3rd June, 1924*


# முன்னுரை

பால கோபால லீலை என்னும் இந்தச் சிறு நூல் இந்து மத சம்பந்தமானது. பகவான் மானிடனாக வந்து மானிடத் திருமேனிக்கேற்றபடி செய்த லீலைகளைக் கூறுவது. இஃது எம்மதத்தினரும் விரும்பத்தக்க விசேஷமுடையது.

இது சிறு பிள்ளைகளுக்கென்றே எழுதியதாகலால், அவர்கள் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், விருப்பத்துடனும் தடையின்றிப் படிக்கவும், படித்து விஷயந் தெரிந்துகொண்டு பிறருக்குக் கதை சொல்லி மகிழவும் ஏற்றபடி எளிய நடையில் சந்தி பிரித்து எழுதப்பட்டுள்ளது. இதனைக் கல்வி உலகம் நல்வரவேற்கும் என்னுந் துணிபுடையேன்.


இங்ஙனம்:

திரு - அ. சுப்பிரமணிய பாரதி.




11-ம் பக்கம் பார்க்க.

# பால கோபால லீலை




## 1. பால கோபாலன் [illegible]

ட இந்தியாவில் யமுனை என்னும் ஒரு பெரிய நதி ஓடுகிறது. அதன் கரையின்மேல் மதுரை ன்றொரு நகரம் உண்டு. அதை வடமதுரை என்றும் சால்லுவார்கள். அந்த நகரத்தில் முன் காலத்தில்

போஜர் என்ற வகுப்பினர் இருந்தனர். அவர்கள் யாதவ வமிசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு உக்கிரசேனன் என்ற ஓர் அரசன் இருந்தான். அந்த அரசனுக்குக் கம்ஸன் என்ற ஒரு குமாரன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன்; தன் மனம் போனபடி நடப்பவன்; முரடன்; கர்வங் கொண்டவன்; மிக்க பலமுடையவன். அவனுக்குத் தான் அரசனாக வேண்டுமென்ற ஆசை அதிகமாய் இருந்தது. அந்த ஆசையினால், அவன் தன் தகப்பனைச் சிறையில் வைத்துவிட்டுத் தானே அரசனானான்.

உக்கிரசேனனுக்குத் தேவகன் என்ற ஒரு தம்பி இருந்தான். அவன் பெண் தேவகி என்பவள். அவள் சூரசேன ராஜாவின் பிள்ளையாகிய வசுதேவனை மணந்திருந்தாள். மண நாளில் தேவகியும் வசுதேவனும் ஓர் இரதத்தில் ஏறி வந்தனர். அந்த இரதத்துக்குக் கம்ஸன் சாரதியாய் இருந்தான்.

இரதம் போய்க்கொண்டிருந்தது. அப்போது, "அடே [illegible], இரதத்திலே உள்ள உன் சகோதரியின் எட்டாவது பிள்ளை உன்னைக் கொலை புரியும்," என்று ஓர் அசரீரி ஆகாயத்தில் பிறந்தது.

கம்ஸன் அதைக் கேட்டதும் மிக்க கோபம் கொண்டு கையில் வாளை உருவித் தேவகியை வெட்டுவதற்குப் போனான். வசுதேவன் அவனைத் தடுத்து, "நீ இவளைக் கொல்லாதே. இவள் வயிற்றிலே பிறக்-

கும் பிள்ளைகளையெல்லாம் நான் உன்னிடம் கொடுத்துவிடுகிறேன். அந்தக் குழந்தைகளை நீ உன் இஷ்டப்படியே செய்துகொள்," என்றான். பிறகு கம்ஸன் கோபந் தணிந்து, அவனைப் புகழ்ந்து, "அப்படியே ஆகட்டும்," என்று அப்பொழுதே வசுதேவனையும் தேவகியையுங் காவலில் வைத்தான்.

பிறகு தேவகிக்குக் குழந்தைகள் பிறந்தன. வசுதேவன் குழந்தை பிறக்குந்தோறும் கம்ஸனிடம் கொடுத்து வந்தான். கம்ஸன் ஒவ்வொரு குழந்தையையும் இரக்கமில்லாமல் கொன்று வந்தான். அவன் அப்படி ஆறு குழந்தைகளைக் கொன்றான். பகவான் ஏழாவது குழந்தையைத் தேவகியிடமிருந்து உரோகிணி என்பவளிடம் சேர்த்துவிட்டான். உரோகிணி, வசுதேவனுக்கு மற்றொரு மனைவி. அவள் யமுனை ஆற்றின் அக்கரையிலிருந்த கோகுலம் என்ற இடைச்சேரியில் வசித்து வந்தாள். அவளுக்கு அந்தச் சமயம் குழந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குழந்தை வெகு அழகாய் இருந்தது. அதுதான் வசுதேவனுடைய ஏழாவது குழந்தை.

அவ்வாறாக, கம்ஸன் எட்டாவது குழந்தைக்குப் பயந்து, வசுதேவனையும் தேவகியையும் சிறைசெய்துவிட்டான். சிறைச்சாலையில் தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை வெகு அழகாய் இருந்தது. அதன் நிறம் நீல மேகம்

போல இருந்தது. அதற்கு நான்கு கைகளும் மார்பில் ஸ்ரீவத்ஸம் என்கிற ஒரு மறுவும் இருந்தன.

அந்தக் குழந்தையைக் கண்ட தேவகியும் வசு-தேவனும் என்றும் அடையாத ஆனந்தமடைந்தனர்; அடைந்தும், "பாவியாகிய கம்ஸன் இதையும் கொன்றுவிடுவானே! இக்குழந்தை ஏன் நமக்குப் பிறந்தது!" என்று எண்ணித் துக்கப்பட்டனர். உடனே அந்தக் குழந்தை சாதாரணமான குழந்தை-யாகிவிட்டது. 'இஃது என்ன அதிசயம்!' என்று தாயும் தந்தையும் ஆச்சரியமடைந்தனர்.

வசுதேவனுக்கு அந்தக் குழந்தையை அங்கே வைத்திருக்க மனம் வரவில்லை. வெளியே போக முடிந்தால், குழந்தையை எப்படியாவது காப்பாற்றி-விடலாமென்று அவன் எண்ணினான். அப்பொழுது நடு ராத்திரி வேளை. சிறைச்சாலைக் காவலாளிகள் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆயினும், வசு-தேவனால் எப்படி வெளியே வர முடியும்? முடியா-மையால், அவன் கவலைகொண்டு கடவுளை நினைத்துத் துதித்தான். அவன் காலில் பூட்டியிருந்த தளை, கடவுளுடைய கிருபையால் தானே விடுபட்டது. சிறைச்சாலைக் கதவும் திறக்கப்பட்டது.

வசுதேவன் உடனே சந்தோஷத்துடன், குழந்-தையை ஏந்திக்கொண்டு, வெளியே போனான். அப்-பொழுது மழை துளித்துக்கொண்டிருந்தது. எங்கும்

ஒரே இருளாய் இருந்தது. 'இந்த இருளில் நாம் எங்கே போகலாம்!' என வசுதேவன் ஆலோசித்தான்.

கோகுலத்தில் இடையர்களுக்குத் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நந்தன். அவனை




நந்த கோபன் என்றும் சொல்லுவார்கள். நந்த கோபன் வசுதேவனுக்கு நண்பன். அந்நண்பனுடைய வீட்டில் குழந்தையை ஒப்புவிக்கலாம் என்று அவன் தீர்மானித்தான்.

அதனால், கவலை அற்றவனாய்க் குழந்தையுடன் யமுனை நதியைக் கடந்து, கோகுலத்தில் நந்தகோபன்

வீட்டுக்குப் போனான், நந்த கோபன் மனைவி யசோதைக்கு அப்பொழுது பெண் குழந்தை பிறந்திருந்தது. அவள் மயக்கமாய்ப் படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் வசுதேவன் தன் குழந்தையைக் கிடத்தி அருகிலிருந்த அவள் குழந்தையைத்தான் எடுத்துக்கொண்டு மதுரையைச் சேர்ந்து, தேவகியின் பக்கத்தில் கிடத்தினான். அதை யாரும் பார்க்கவில்லை. நந்த கோபனுக்கும் அது தெரியாது. ஏனெனில், அவன் அரசன் பகுதிப் பொருள் செலுத்த மதுரை நகருக்குப் போயிருந்தான்.

பிறகு கம்சன் வழக்கம்போல அக்குழந்தையையும் கொல்லுவதற்காக வசுதேவனிடமிருந்து வாங்கி ஒரு கற்பாறையில் அறைந்தான். அப்பெண் குழந்தை பாறையில் விழுமுன் எழுந்து அந்தரத்தில் போயிற்று; போனவுடன் எட்டுக் கைகளுடைய மகா காளி உருவங் கொண்டு விளங்கியது. அதன் ஒவ்வொரு கையிலும் ஒவ்வோர் ஆயுதமிருந்தது. அதைக் கம்சன் கண்டு பயந்து, கலங்கி நின்றான்.

அக்கொடிய உருவங் கொண்ட அது, " அடா மூடா, என்னைக் கொல்லுவதால் பயனென்ன! உன்னைக் கொல்லுபவன் வேறோரிடத்தில் பிறந்திருக்கின்றான். அவன் தேவர்களுக்கெல்லாம் தேவன்; எல்லோராலும் வணங்கப்படுபவன். அவனைக் கண்டு பிடித்து, உனக்கு நல்லது எதுவோ, அதைச் செய்துகொள்," என்று சொல்லி மறைந்தது.

# 2. பூதனை வதை

கம்ஸன் மகா வீரனானபடியால், அவனுக்கு அசுரர்களெல்லாரும் பயப்பட்டிருந்தார்கள். அதனால், அவன், சில அசுரர்களையும் பூதனை என்னும் அரக்கியையும் அழைத்து, "எந்தக் குழந்தை மிகுந்த பலமும் சாமர்த்தியமும் உடையதாய் இருக்கிறதோ, அந்தக் குழந்தையைத் தேடி எப்படியாவது கொன்றுவிடுங்கள்," என்று கட்டளையிட்டான். பிறகு வசுதேவனையும் தேவகியையும் சிறையிலிருந்து விடுத்தான்.

கம்ஸன் ஏவிய பூதனை என்பவள் அந்நகரத்தில் பல இடங்களிலும் சென்று, சிறு குழந்தைகளுக்குப் பால் கொடுப்பவள் போலக் கொடுத்துக் குழந்தைகளைக் கொன்று வந்தாள். அப்படியே யசோதையின் வீட்டிற்குச் சென்று அவள் பிள்ளைக்குப் பால் கொடுத்தாள். அந்தக் குழந்தை பால் குடிப்பதுபோல அந்த அரக்கியின் இரத்தத்தையெல்லாம் உறிஞ்சிவிட்டது. உறியவே, பூதனை பெரிய சத்தமிட்டு அழுதுகொண்டு, கிழே விழுந்து இறந்தாள்.

அவள் கூவிய கூச்சல் வெகு தூரம் கேட்டது. யசோதை அந்தக் கூச்சலைக் கேட்டு ஓடி வந்தாள். சுற்றுப் பக்கங்களிலிருந்த கோபிகைகளும் ஓடிவந்து பார்த்தார்கள். ஒரு பெரிய பேயுருவம் கீழே இறந்து கிடப்பதையும் அதன் மடியில் குழந்தை இருப்பதையும் கண்ட அவர்களெல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். யசோதை, உடனே குழந்தையை எடுத்து, அதற்குப் பசுவின் வாலைச் சுற்றிப் பேயின் தோஷத்தைப் போக்கினாள். உடனே நந்தகோபனும் வந்து குழந்தையை எடுத்து அணைத்து முத்தமிட்டுத் தடவிக் கொடுத்தான்; "ஈசன் உன்னைக் காப்பாற்றுவான்," என்று மந்திரம் ஜபித்து அதைத் தொட்டிலிலே வளர்த்தினான்.

# 3. சகடாசுரன் வதை

பிறகு தொட்டிலின் அருகே ஒரு வண்டி இருக்க, அதன்மேல் ஓர் அசுரன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன், கம்ஸன் ஏவலினாலே குழந்தையைக் கொல்ல வந்தவன். அதை அறிந்த அந்தக் குழந்தை பால் குடிக்க விரும்பி அழுவதுபோல அழுதுகொண்டே தன் அழகிய சிறியகாலால் அந்த வண்டியை உதைத்தது. அதனால், அந்த வண்டி கவிழ்ந்து, அதன்மேல் இருந்த சாமான்களெல்லாம் கீழே விழுந்து உடைந்தன.

அந்த ஓசையைக்கேட்டு எல்லோரும் விரைந்து ஓடி அதனைப் பார்த்தனர்; வண்டி கவிழ்ந்து இருந்ததைக் கண்டு, "இப்படிச் செய்தவர் யார்?" என்று அங்குவிளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைக் கேட்டனர். அவர்கள், "இந்தக் குழந்தைதான் தன் காலால் உதைத்து வண்டியை இப்படிச் செய்தது; நாங்கள் எங்கள் கண்ணினாலே பார்த்தோம்," என்றார்கள். இதைக் கேட்ட எல்லோரும், "ஆச்சரியம்!

ஆச்சரியம்!" என்று சொல்லிக் கை கொட்டினர். நந்த கோபனும் ஆச்சரியத்தோடு குழந்தையை எடுத்துக்கொள்ள, யசோதை திருஷ்டி கழித்தாள்.

அவ்வாறு இருக்கையில் ஒரு நாள் வசுதேவன் கர்க்கன் என்னும் தன் வீட்டுப் புரோகிதனை நந்த கோபன் வீட்டுக்கு அனுப்பினான். அவன் சென்று உரோகிணியின் குழந்தைக்கும் யசோதையின் குழந்தைக்கும் ஜாதகர்மம் முதலிய சடங்குகளைச் செய்தான். பெற்றோர் மூத்த குழந்தைக்கு இராமன் என்று பெயரிட்டனர்; இளைய குழந்தைக்குக் கிருஷ்ணன் என்று பெயரிட்டனர்.

சில நாளில் அந்தக் குழந்தைகள் இரண்டும் தவழ்ந்து விளையாடத் தொடங்கின; அவை நிமிஷ நேரங்கூடச் சும்மா இருந்ததில்லை; இங்குமங்கும் போய்ப் பண்டத்தைக் கொட்டுவதும் பானையை உருட்டுவதுமாய் இருந்தன; மாட்டுத் தொழுவிற்கு ஓடிக் கன்றுகளின் வாலைப் பிடித்து இழுத்து விளையாடின. யசோதைக்கும் உரோகிணிக்கும் அவைகளின் விளையாடல் மிக்க வெறுப்பை உண்டாக்கிற்று. என்ன செய்வார்கள் பாவம்! அவர்களை யானை கட்டிய மரமாக இரண்டு குழந்தைகளும் ஆட்டி வைத்தன. அவர்களாலே அந்தக் குழந்தைகளை அடக்க முடியவில்லை.

இப்படி நாள்தோறும் அவர்கள் செய்த துஷ்டத்தனம் கொஞ்சமன்று. ஆகையால், ஒரு நாள்

யசோதை கிருஷ்ணனைப் பிடித்து, அவனுடைய இடுப்பிலே ஒரு கயிற்றைக் கட்டி, அங்குக் கிடந்த ஓர் உரலிலே கட்டிவைத்து, “அடா பயலே, இனி நீ என்ன செய்வாய் ? ஓடு பார்ப்போம்! அரை நிமிஷமும் சும்மா இருக்கமாட்டேன் என்கிறாயோ! துஷ்டப் பயலே!” என்று வைது தன் வேலையைக் கவனிக்கப் போய்விட்டாள்.

யசோதை போன பின் கிருஷ்ணன் தன்னைக் கட்டி இருந்த உரலை இழுத்துத் தவழ்ந்து போனான். அங்கே ஓரிடத்தில் இரண்டு பெரிய மருத மரங்கள் இருந்தன. அவை இரண்டும் மிகவும் நெருங்கி இருந்தன. அவற்றின் நடுவே கிருஷ்ணன் புகுந்தான். அப்பொழுது அந்த உரல் அம்மரங்களின் இடையே சிக்கிக்கொண்டது. அவ்வுரலை வலிந்து இழுத்ததனால் மரமிரண்டும் வேரோடு இரண்டுபக்கங்களிலும் மளமள என்று சாய்ந்து கீழே விழுந்துவிட்டன. அந்த மரங்கள் விழுந்த சத்தங் கேட்டு அங்கிருந்தவர்கள் ஓடிச் சென்று பார்த்தார்கள்; கிருஷ்ணன் தவழ்ந்து கொண்டே சிரித்தான்.

அந்தக் காட்சியைக்கண்டவர்கள், “என்ன இது! பெரிய மரங்கள் இப்படித் திடீரென்று சாய்ந்துவிட்டனவே!” என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்; அப்போது கிருஷ்ணனைப் பார்த்து, ‘தாமோ-

தரா,' என்று அழைத்தார்கள்; பிறகு அந்தப் பெயராலும் கிருஷ்ணனை அழைத்து வந்தார்கள்.

நந்த கோபன், "என்ன இது! அடிக்கடி இப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்துகொண்டே இருக்கின்றதே! முதலில் ஒரு பேய் வந்தது; பின் வண்டி விழுந்தது; இப்போது மரங்கள் விழுந்தன; இனிமேல் இந்த ஊரில் நாம் இருக்கக் கூடாது. வேறு ஊருக்குப் போய்விடுவோம்,' என்று நிச்சயித்தான்.

மறு நாளே, நந்த கோபனும் வேறு சிலரும் அவ்வூரை விட்டு வண்டிகளிலே புறப்பட்டு, அழகிய பிருந்தாவனம் போய்ச் சேர்ந்தார்கள். பிருந்தாவனத்தில் மாடுகள் மேய்வதற்கு வேண்டிய புல் பூண்டுகள் இருந்தன. குடிக்கவும் குளிக்கவும் போதுமான நீர் உள்ள குளம் குட்டைகளும் கிணறுகளும் இருந்தன. ஆகையினால், அது குடியிருப்பிற்கு வேண்டியவை யெல்லாம் நிறைந்ததாயிருந்தது. எல்லோரும் அங்கே சந்தோஷமாகக் குடியேறினர்.



# 4. காளிங்க மர்த்தனம்

அப்பால் இரண்டொரு வருஷங்களில் இராமகிருஷ்ணர் இருவரும் கன்று மேய்க்கும் பருவமடைந்தனர். அவர்கள் ஓரிடத்தில் நில்லாமல் மனம் போனபடி விளையாடத் தொடங்கினார்கள். இருவருக்கும் தலை மயிர் வெகு அழகாய் இருந்தது. தலையில் அவர்களுக்கு மயிர் நெருங்கி மிகக் கறுப்பாய் இருந்தது. அவர்கள் காட்டிலுள்ள மலர்களைப் பறித்துக் கையில் எப்போதும் வைத்து விளையாடுவார்கள். கன்று மேய்க்கும் மற்ற இடைப் பிள்ளைகளோடு அவர்களும் கன்று மேய்க்கப் போவார்கள். மேய்ச்சல் தரையிலே அவர்கள் கன்றுகளை மேய விட்டுவிட்டுப் புல்லாங்குழலை ஊதிக்கொண்டிருப்பார்கள்; சில சமயம் இலைகளினாலே வாத்தியங்களைச் செய்து ஊதி விளையாடுவார்கள்.

இப்படி இருக்கையில் வழக்கம்போல மாரிகாலம் வந்தது. மழை அதிகமாகப் பெய்தது. எங்கே கண்டாலும் ஜலம்; எங்கே கண்டாலும் சேறு; எங்கே பார்த்தாலும் பசும்புல்; எங்கே பார்த்தாலும் நீரோ-

டும் இரைச்சல். அடிக்கடி மேகங்கள் நெருங்கிச் சூரிய சந்திரர்களை மறைக்கும்.

அவ்வாறு இருந்தும், இராம கிருஷ்ணர்கள் மற்றைய இடைச் சிறுவர்களோடு கன்றுகள் மேய்க்கப் போவது வழக்கம். வழி தெரியாமல் எங்கும் புல் முளைத்து மறைத்திருக்கும். ஆயினும், அவர்கள் சிறிதும் அவைகளைக் கவனியாமல் விளையாடிக்கொண்டே மேய்ச்சல் தரைக்குப் போய்ச் சேருவார்கள்.

அந்நாளில் ஒரு நாள் இராம கிருஷ்ணர் இருவரும் பசுக்கள் மேயுமிடத்திலே ஒரு மரத்தடியில் உலாவிப் பாடிக்கொண்டிருந்தனர்; பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றோரிடம் போய்க் காட்டு மலர்களையும் மயில் தோகைகளையும் எடுத்துச் சூடிக்கொண்டு, குதித்துக் கைகொட்டி விளையாடினார்கள்; சிறிது நேரம் கழித்து மற்றோரிடம் போய்த் தழைகளைப் படுக்கையாகப் பரப்பிப் படுத்துக்கொண்டிருந்தார்கள்; வேறோரிடம்போய் மேகம் இடிக்கும்போது அவர்களும் வாயினால், "டும் டும்," என்று கூவிக்கொண்டிருந்தார்கள்; மற்றப்பிள்ளைகள் பாடுவதைப் போலப் பாடிச் சிரித்தார்கள்; சில இடங்களிலே குயில்கள் கூவினதைக் கேட்டு அதைபோல அவர்களும் கூவி விளையாடினார்கள்.

இவ்வாறு விளையாடிச் சென்றபோது கிருஷ்ணன் இராமனைவிட்டுப் பிரிந்து, வேறு சில பிள்ளைகளோடு

யமுனை நதிக்குப் போனான். அங்கே காளிங்க மடு என்ற ஒரு பெரிய மடு இருந்தது. அதில் காளிங்கன் என்ற ஒரு பெரிய பாம்பிருந்தது. அதனாலேதான் அம்மடுவிற்கு அந்தப் பெயர் வந்தது. அந்த மடு, பார்வைக்குப் பயங்கரமாய் இருக்கும். அந்த நாகம் அடிக்கடி அதில் விஷத்தைக் கக்கித் திரியும். அதனால், அந்த மடுவில் ஒருவரும் இறங்குவதில்லை. அந்நீரை ஒருவரும் குடிப்பதுமில்லை. தவறிக் குடித்தவர்கள் இறந்துவிடுவது வழக்கம்.

கிருஷ்ணன் அங்கே போய் அதைப் பார்த்ததும் அதில் இருந்த காளிங்கன் என்னும் பாம்பைக் கொன்று யாவருக்கும் நன்மை செய்ய நினைத்தான்; உடனே அங்கிருந்த ஒரு பெரிய கடம்ப மரத்தின்மேலேறி, அந்த மடுவில் திடீரெனக் குதித்தான். அந்த ஓசையைக் கேட்ட காளிங்கன் கோபங்கொண்டு அநேக நாகங்களுடன் வெளிக் கிளம்பிற்று. அந்த நாகங்களெல்லாம் கிருஷ்ணனைக் கயிறுபோலச் சுற்றி இறுக்கிக்கொண்டு கடித்தன.


அதைக் கண்ட யாதவச் சிறுவர்களெல்லாரும் பயந்து ஓடிப் போய், "கிருஷ்ணன் காளிங்க மடுவில் குதித்துவிட்டான்! ஐயோ! அவனை நாகங்கள் கடிக்கின்றனவே!" என்று கூச்சலிட்டார்கள். அதைக் கேட்டதும் அங்கிருந்த இடையர்கள் அலறிக்கொண்டு மடுவுக்கு ஓடி வந்தார்கள். அப்படியே நந்த

கோபன், யசோதை, உரோகிணி, இராமன் முதலியவர்களும் மடுவை நோக்கி ஓடிவந்தார்கள்.

அவர்கள் கிருஷ்ணன் பாம்புகளின் நடுவில் அகப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, ஒன்றும் செய்யமாட்டாமல் அழுதுகொண்டு நின்றார்கள். நந்த கோபனும் யசோதையும் பயமுடையவர்களாய் மரம்போலச் செயலற்று நின்றுவிட்டார்கள்; பிறகு கண்ணீர் விட்டு அழுது, "நாமெல்லோரும் ஆயர் பாடிக்குப் போகக்கூடாது. ஏனெனில், கிருஷ்ணனில்லாத பாடியில் நமக்கென்ன வேலை இருக்கிறது? அந்த ஊர் தண்ணீரில்லாத குளத்துக்குச் சமானமல்லவா? சந்திரன் இல்லாத இரவுக்குச் சமானமல்லவா? இந்த மடுவிலேயே விழுந்து சாவோம்," என்று தீர்மானித்தார்கள்.

அப்பொழுது கிருஷ்ணன் கொல்லென்று சிரித்தான். அதைக்கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். "பாம்புகள் தன்னைச் சுற்றிக்கொண்டு கடிக்கும்போது சிரிக்கும் இந்தக் கிருஷ்ணனை விட்டுவிட்டு நாமெப்படிக் கோகுலம் போவது!" என்று யசோதையும் நந்த கோபனும் அழுதார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் யசோதை மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள்.

அப்பொழுது இராமன் கிருஷ்ணனைப் பார்த்து, "உன்னுடைய பலம் தெரியாத இவர்கள் அழுது வருந்துகிறார்கள். இவர்கள் வருத்தம் நீங்க ஒரு




2 காளிங்க மர்த்தனம்

நொடிக்குள்ளே காரியத்தை முடித்துக்கொண்டு கரை ஏறுவார்," என்றான். அவன் சொன்னதைக் கிருஷ்ணன் மாத்திரம் அறிவான். இராமன், பிறர் அறியாதபடி குறிப்பாகப் பேசினான். தன்வல்லமையை இராமன் நினைப்பூட்டியதும் கிருஷ்ணன் புன்சிரிப்புச் சிரித்து, அந்தக் காளிங்கனை ஓர் அறை அறைந்தான். அதுவும் மற்றைய நாகங்களும் கிருஷ்ணனை விட்டு விலகின.

காளிங்க நாகத்திற்குத் தலை ஐந்து. அந்நாகம் படம் எடுத்துச் சீறியது. கிருஷ்ணன் தன் இரண்டு கைகளினாலும் அந்தக் காளிங்கனுடைய படத்திலுள்ள நடுத்தலையைப் பிடித்து அமுக்கிக்கொண்டு, அதன்மேலேறி நடனம் செய்தான். அந்நாகத்தின் நடுத்தலை கிருஷ்ணனுடைய காலிலேபட்டு நசுங்கவே, அது மற்றொரு தலையைத் தூக்கியது. அத்தலையின் மீதும் கிருஷ்ணன் ஏறிக் குதித்து மிதித்தான். இப்படியே அது தூக்கின தலைகளையெல்லாம் மிதித்து வருத்தவே, அந்நாகம் மயக்கம் அடைந்து, தன் வாய்களால் இரத்தத்தைக் கக்கியது. பிறகு கிருஷ்ணன் அதனிடத்து இரக்கம் வைத்து, அதைப் பார்த்து, "ஏ ! காளிங்கனே, இவைகளோடு நீ சமுத்திரத்திற்குப் போய்விடு; இங்கு இருந்தால், நான் உங்களைக் கொன்றுவிடுவேன் !" என்று பயமுறுத்தி, அவைகளைத் துரத்திவிட்டுக் கரை ஏறினான்.

அவ்வாறு கரையேறிய கிருஷ்ணனை யசோதையும் நந்தகோபனும் கண்டு, இறந்த பிள்ளையை மறுபடி உயிரோடு பெற்றவர்களைப்போல மகிழ்ந்து, தழுவி முத்தமிட்டு, "குழந்தை பிழைத்தது கடவுள் செயல்," என்று வாழ்த்தினார்கள். அப்படியே மற்றைய ஆயர்களும் செய்தார்கள். கிருஷ்ணனைச் சேர்ந்த பிள்ளைகள் மகிழ்ந்து குதித்துக் கூத்தாடினார்கள். பிறகு, எல்லோரும் கிருஷ்ணனை அழைத்துக்கொண்டு ஆயர்பாடியைச் சேர்ந்தனர். அன்று முதலாக அந்த மடுவின் நீர் எல்லோரும் குளிக்கவும் குடிக்கவும் தக்கதாயிற்று. அதனால் எல்லோரும் கிருஷ்ணனைப் புகழ்ந்து வாழ்த்தினர்.

# 5. அசுரர் வதை

கிருஷ்ணன் கன்றுகளோடு பசுக்களை மேய்த்துப் பரிபாலித்து வந்தபடியால், அவனைக் கோபாலன் என்று எல்லோரும் வழங்கி வந்தனர். ஒரு நாள் கோபாலனும் இராமனும் சேர்ந்து, மாடு மேய்க்கப் போனார்கள்; மாடுகளை மேய்த்துக்கொண்டே ஒரு பனந்தோப்பை அடைந்தார்கள். அந்தத் தோப்பில் ஓர் அசுரன் கழுதையின் வடிவம் கொண்டிருந்தான். அந்த அசுரனோடு பின்னும் சில அசுரர்களும் கழுதையின் உருவம் கொண்டு அங்கு வசித்திருந்தார்கள். அந்த அசுரர்கள் அங்கே போகிறவர்களைக் காலால் உதைத்தும் கடித்தும் கொன்றுவிடுவது வழக்கம். அதனால், அந்த இடத்திற்கு ஒருவரும் போவதில்லை, அது பனை மரங்கள் நெருங்கிய காடு. அம்மரங்களில் பழங்கள் மிகுதியாகப் பழுத்திருந்தன.


இராமனும் கோபாலனும், அந்தப் பழங்களைக் கண்டதும், "அடா பயல்களா, பனம்பழமடா!" என்று கூவி மற்றைப் பிள்ளைகளை அழைத்தார்கள். அவர்கள்,

"நாங்கள் அங்கே வரமாட்டோம்; அங்கே அசுரர் இருக்கின்றனர்," என்றார்கள். இராம கிருஷ்ணர் இருவரும், "நீங்கள் வாருங்கள்; நாங்களிருக்கிறோம்! எந்தப் பயலடா கிட்ட வருகிறவன்! பார்ப்போம்!" என்று அழைத்தனர். பிறகு அவர்கள் தைரியங்கொண்டு அங்கே போனார்கள். இராமன் ஒரு பனை மரத்தையும், கிருஷ்ணன் ஒரு பனை மரத்தையும் பிடித்து ஆட்டிப் பனம்பழங்களை உதிர்த்தார்கள்.

பனம்பழங்கள், "தொப்புத் தொப்பு" என்று விழுந்தன. அந்த ஓசையைக் கேட்டுத் தேனுகன் என்னும் அசுரன் ஓடி வந்து, தன் பின்னங்கால் இரண்டையுந் தூக்கி இராமனை உதைத்தான். இராமன் பலவானானதால், அவன் அந்தக் கழுதையின் பின்கால் இரண்டையும் சேர்த்துப் பிடித்துக் கரகரவென்று சுழற்றிப் பனை மரத்தின்மேல் வீசி எறிந்தான். அந்தக் கழுதை பனம்பழக் குலையில் மோதி, அங்கிருந்து கீழே விழுந்து இறந்தது. பனம் பழங்களும் குலையிலிருந்து கணக்கில்லாமல் மூலைக்கொன்றாய்த் "தொப்புத் தொப்பு" என்று விழுந்தன. இடைப் பிள்ளைகள் பழங்களைச் சந்தோஷமாக எடுத்துக்கொண்டார்கள்.

தேனுகன் இறந்ததும் வேறு சில அசுரராகிய கழுதைகள் ஓடி வந்தன. அவைகளைக் கோபாலன் பிடித்துப் பிடித்துப் பனை மரத்திலே எறிந்து கொன்-

னான்; இராமனைப் பார்த்து, "இஃது என் பங்கு! என் வேலை," என்று குதித்தான். பையன்களெல்லோரும் என்றுமடையாத சந்தோஷம் அடைந்து, சிரித்துக் கை தட்டி ஆச்சரியப்பட்டார்கள்; பிறகு கிருஷ்ணனைப் பார்த்து, "நீ மிகவும் கெட்டிக்காரனடா!" என்று அவனைத் தட்டிக் கொடுத்தார்கள்; "அடா ராமா, நீ பலராமனடா!" என்றார்கள். அன்று முதல் இராமனுக்குப் பலராமன் என்ற பெயர் உண்டாயிற்று. அந்தச் செய்தி பிறகு இடைச்சேரியில் எங்கும் பரவியது. ஆயர்கள், "இதென்ன! இவர்கள் தெய்வப் பிறவிதான்! அல்லாவிடில் அசுரர்களை இந்தச் சிறுவர்கள் இவ்வாறு கொல்லுவார்களா?" என்று சொல்லி, இராம கிருஷ்ணர்களை மிகவும் புகழ்ந்தார்கள். அவர்கள் அன்று முதல் அத்தோப்பிற்குப் பயமில்லாமல் போகத் தொடங்கினார்கள்.



# 6. பிரலம்பன் வதை

இடைப்பிள்ளைகளும் அங்கே போய் மாடுகளை மேய்த்து வந்தார்கள். அப்படி மேய்த்து வந்த போது ஒரு நாள் பிரலம்பன் என்ற ஓர் அசுரன் இடைப் பையன் உருவங்கொண்டு அங்கே வந்து, அந்தப் பிள்ளைகளில் ஒருவனாயிருந்தான். அவன் கோபாலனையும் பலராமனையும் கொல்வதற்கு வந்தவன்; ஆகையினால், தன் காரியத்தை முடிக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

இடைப் பிள்ளைகள் எல்லோரும் விளையாடத் தொடங்கினார்கள். பலராமனும் கோபாலனும் பாண்டீரம் என்னும் ஓர் ஆலமரத்தின் அடியில் போய்த் தோளில் அணை கயிறும், மார்பில் வனமாலையும் அணிந்துகொண்டு, வேடிக்கையாகப் பாடினார்கள்; மாடுகளைப் பெயரிட்டு அழைத்து மேய்த்தார்கள்; மரத்தின் விழுதுகளை ஒன்றோடொன்று முடிந்து ஊஞ்சல் கட்டி உட்கார்ந்து ஊசலாடினார்கள்; கோல் சுழற்றுதல், மல் யுத்தம் செய்தல் முதலிய விளையாட்டு

களை விளையாடினார்கள். மற்றைப் பிள்ளைகளும் பல விளையாட்டுகளை ஆடினார்கள்.

பிறகு எல்லோரும் சேர்ந்து மான்போலத் துள்ளி விளையாடுவதாகிய ஆட்டத்தைத் தொடங்கி, இரண்டிரண்டு பேராய்ச் சேர்ந்து, பிரிந்து நின்றனர். பலராமனோடு பிரலம்பன் சேர்ந்தான். கோபாலனோடு ஸ்ரீதயன் என்பவன் சேர்ந்தான். பிறகு அவர்கள் விளையாடத் தொடங்கிக் குதித்து வந்தார்கள். அந்த விளையாட்டில் பலராமன் பிரலம்பனை ஜயித்தான்; கோபாலன் ஸ்ரீதயனை ஜயித்தான். ஜயித்தவர்களைத் தோற்றவர்கள் தோளின்மேல் ஏற்றிவைத்துச் சுமந்துகொண்டு பாண்டீரம் என்னும் ஆலமரம் வரையிலே போய்த் திரும்பி வரவேண்டுமென்னும் நிபந்தனை உண்டு. ஆகையினால், பலராமனைப் பிரலம்பன் தூக்கிக்கொண்டான்; கோபாலனை ஸ்ரீதயன் தூக்கிக்கொண்டான்.

இருவரும் போகும்பொழுது பிரலம்பன் சிறிது தூரம் சென்றதும் பலராமனைத் தூக்கிக்கொண்டு மேலே கிளம்பினான். அது கண்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டு நின்று, ஆரவாரித்தனர். பலராமன், 'இவன் யாரோ அசுரன்; வஞ்சகன்,' என்று அறிந்து, தன் உடலை வெகு பாரமாக்கி, அவனை அழுத்தினான். பிரலம்பன் உடனே தன் உடம்பையும் பெரிதாக்கினான்.

அப்பொழுது பலராமன், "கிருஷ்ணா! கிருஷ்ணா! கோபாலா! இவன் ஒரு கொடிய அசுரன்! நான் இவனை இப்போது செய்ய வேண்டுவதைச் சொல்," என்றான். கிருஷ்ணன், "அண்ணா, நீ உன் மகிமையையும் உன் பலத்தையும் நினைத்துக்கொள். அவனை உடனே கொல்லுவாய்," என்றான். பலராமன் நகைத்து, உடனே கோபங் கொண்டு, "அடா அசுரப் பயலே!" என்று கூவி, அவன் கழுத்திலே ஓங்கிக் கையினால் குத்தினான். குத்துப்பட்ட அசுரன் கண்களிரண்டும் பிதுங்கக் கபாலம் உடையக் கீழே அலறிக்கொண்டு விழுந்து இறந்தான். எல்லோரும் பலராம கிருஷ்ணர்களைப் புகழ்ந்து சந்தோஷம் அடைந்தனர். பிறகு அவர்கள் கோகுலம் போய்ச் சேர்ந்தார்கள்.

# 7. கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தது

மழைக்காலம் போய்க் கோடைக்காலம் வந்தது. குளம் குட்டைகளில் இருந்த நீர் வற்ற ஆரம்பித்தது. அவற்றில் மீன்கள் முதலியன வருத்தமடைந்தன. தண்ணீரெல்லாம் தெளிந்திருந்தது. வெயில் அதிக கொடுமையாய் இருந்தது.


அப்பொழுது இடையர் எல்லோரும் காட்டிற்குப் போய் அங்கிருந்த மலைக்குத் திருவிழாச் செய்தனர். அப்பொழுது திடீரென்று ஆகாயத்தில் மேகம் நெருங்கிப் பெருமழை பொழிந்தது. அந்த மழையினால் ஆயர் பாடியே அழிந்துபோகும்போல இருந்தது. அது கண்டு எல்லோரும் பயந்து வருந்தினர். கோபாலன் அப்பொழுது கோவர்த்தனம் என்னும் பெரிய மலையை அடியோடு பெயர்த்து எடுத்து ஒரு கையில் குடைபோல ஏந்திக்கொண்டு, எல்லோரையும் பார்த்து, “நீங்களெல்லோரும் உங்கள் குழந்தைகளுடனும் பசுக்களுடனும் இங்கே வந்துவிடுங்கள்.

நான் காப்பாற்றுகிறேன்; பயப்பட வேண்டா. இந்த மலை உங்கள் மேல் விழாது; இஃது எனக்கு ஒரு சிறு பந்தைப்போலப் பளுவில்லாமல் இருக்கின்றது,'' என்றான்.




இடையர்கள் தங்கள் தங்கள் பொருள்களோடும், குழந்தைகளோடும், மாடுகளோடும் அந்த மலையின் கீழே போய்த் தங்கினார்கள்; கிருஷ்ணனுடைய

செய்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவனுடைய பெருமையைப் பாடிப் புகழ்ந்தார்கள். மழை ஏழு நாள் வரையில் விடாது பெய்தது. ஏழு நாளும் கிருஷ்ணன், அந்த மலையை அசையாமல் நின்று தாங்கிக்கொண்டு இருந்தான். பிறகு மழை நின்றதும் கிருஷ்ணன், அந்த மலையை முன்போல அவ்விடத்தி-லேயே வைத்தான். ஜனங்கள் ஆயர் பாடியைச் சேர்ந்து, கிருஷ்ணனுடைய சாமர்த்தியத்தைப் பற்றி வியந்து பேசிச் சந்தோஷம் அடைந்தார்கள்.



# 8. அரிஷ்டாசுரன் வதை

"மனிதர்களாலே செய்ய முடியாத செய்கைகளைக் கிருஷ்ணன் விளையாட்டாகச் செய்கிறான். ஆகையினால், இவன் யாரோ தேவன்! மனிதனல்லன்!" என்று எண்ணி, இடையர் எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்; கிருஷ்ணனிடம் சென்று, "நீ யார்? தேவனோ! அல்லது அசுரனோ!" என்று கேட்டார்கள். கிருஷ்ணன் அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு இஷ்டமிருந்தால், என்னிடத்தில் அன்பாயிருங்கள்; இல்லாவிட்டால், சும்மா இருங்கள். இந்த விசாரணை உங்களுக்கு வேண்டா. நான் தேவனும் அல்லேன்; அசுரனுமல்லேன்," என்று சொன்னான். அப்பால் ஆயர்கள், "யாரோ மகா பலவான் பிறந்திருக்கிறான்!" என்றெண்ணிப் பேசாமல் இருந்தார்கள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் கோபாலன் வாயில் புல்லாங்குழல் வைத்துக் கானம் செய்தான். அந்த வேணு கானம் கேட்ட ஆய்ச்சியர் எல்லோரும் தத்தம் வேலையை விட்டு, வீட்டின் வெளியே வந்து, கோபாலனைப் பார்க்கப் புறப்பட்டனர். வீட்டை விட்டு

வெளியே வர முடியாத சிலர், "ஐயோ! கிருஷ்ணன் அழகாய் வேணு கானம் செய்கிறுனே! அவனைப் பார்ப்பதற்கில்லையே!" என்று வருத்தப்பட்டனர். கோபாலனை நேரில் கண்டவர் எல்லோரும் என்றும் அடையாத ஆனந்தம் அடைந்தனர். சிலர் கீழே பூமியில் படிந்திருந்த கிருஷ்ணனுடைய திருவடியின் அடையாளத்தைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு, அவ்விடத்தைத் தொட்டுக் கண்களிலே ஒற்றிக்கொண்டனர்.

கோபாலன் இப்படி வேணு கானம் செய்கையில் அரிஷ்டாசுரன் என்னும் ஓர் அசுரன் ஒரு பெரிய எருதுபோல வேஷங்கொண்டு, ஆயர் சேரியில் நுழைந்து, இங்குமங்கும் ஓடி எல்லோரையும் பயப்படுத்தினன். அந்த எருது மேகம்போலக் கறுத்திருந்தது. அது கூர்மையான கொம்புகளை உடையது; சிவந்த பளபளப்பான கண்களையுடையது; பருத்து உயர்ந்த திமிலை உடையது. அதன் குளம்புகள் பூமியைப் பிளந்தன. நாக்கினுல் அது உதட்டை நக்கிக்கொண்டது, பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தது.

அந்த எருதைக்கண்ட இடையர்களும் இடைச்சிகளும் மிகவும் பயமடைந்து, "கிருஷ்ணு! கோபாலா!" என்று கூவினுர்கள். கோபாலன், "பயப்பட வேண்டாம்," என்று கூறிக் கையைத் தட்டிக் கூக்குரலிட்டான். அந்தச் சத்தம் கேட்டு எருது முக்காரம்

போட்டுக்கொண்டு கோபாலனை நோக்கி ஓடியது. கோபாலன் தைரியமாய் அதை எதிர்த்து நின்றான். அதுவும் பயமில்லாமல் கிருஷ்ணனை நெருங்கியது. கிருஷ்ணன், "வா வா வா" என்றழைத்து, அஃது அருகில் வந்ததும் அதன் கொம்புகள் இரண்டையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான்; காலினால் அதன் அடி வயிற்றில் ஓர் உதை உதைத்தான்; அழுக்குத் துணியைக் கசக்குவதுபோல அதன் கழுத்தைப் பிடித்துக் கசக்கினான்; "கோபாலனிடம் பலிக்குமா இந்தக் குறும்பெல்லாம்!" என்று சொல்லி, அதனுடைய கொம்புகளில் ஒன்றைப் பிடுங்கி அதனாலேயே அதை அடித்தான். அது கீழே விழுந்து இறந்தது. எல்லோரும் கோபாலனைப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.



# 9. நாரதர் கலகம்

நாரதர் என்பவர் ஒரு முனிவர். அவர் முனிவர்களுள் பெரியவர். அவருக்கு முன்னே நடந்த சமாசாரமும் இப்பொழுது நடக்கிற சமாசாரமும் இனிமேல் நடக்கப்போகிற சமாசாரமும் தெரியும். அவரைக் கண்டால், எல்லோரும் மரியாதை செய்வர். அவர் தெய்வத்தன்மை உடையவர். ஆகையினால், அவரிடம் எப்படிப்பட்ட துஷ்டனும் அடங்கியே இருப்பான். துஷ்டத்தனம் செய்பவனை அவர் சாபம் இட்டு அழித்துவிடுவார்; நல்லவர்களைக் கண்டால், அவர்களுக்கு நன்மைகளைச் செய்வார்.

இப்படிப்பட்ட தன்மையுடைய அந்த முனிவர் ஒரு நாள் கம்ஸனுடைய அரண்மனைக்குப் போனார். கம்ஸன் அவரைக் கண்டதும் வந்தனம் செய்து வரவேற்றான்; பெரியவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்து, ஆசனம் கொடுத்து உட்காரும்படி வேண்டினான். நாரதர் உட்கார்ந்து க்ஷேமம் விசாரித்தார்.

அப்பொழுது அவன், "ஸ்வாமி, உலகத்தில் ஏதாவது அதிசயமுண்டோ?" என்று கேட்டான். நாரதர், "கம்ஸா, நான் உனக்கு என்ன சொல்லப் போகிறேன்! உன் ஊரில் உனக்குத்தெரியாமல் எத்தனையோ அதிசயங்கள் நாள்தோறும் நடக்கின்றன," என்றார். கம்ஸன், "அப்படியா! அறிவில்லாதவர்களாகிய எங்களுக்கு என்ன தெரியும்? அந்த அதிசயங்கள் யாவை? நீங்கள் ஏதாவது குறிப்பாகக் காட்டினாலும் நான் கண்டுகொள்வேன்," என்று வேண்டினான்.

நாரதர், "உன்னிடம் வசுதேவன் செய்த வேலையைக் கேள். அவன் தனக்குத் தேவகியிடம் பிறந்த குழந்தையை, அது பிறந்ததும் கோகுலத்திலிருந்த நந்தகோபன் மனைவி யசோதையினிடம் சேர்த்துவிட்டான்; பிறகு யசோதையின் குழந்தையை இங்கே கொண்டுவந்து தேவகியிடம் விட்டு, உன்னிடம் கொடுத்துவிட்டான். யசோதையிடம் விடப்பட்ட குழந்தை இப்பொழுது கோபாலனாக ஆயர்பாடியில் பிருந்தாவனத்தில் இருக்கிறது. தேவகியினுடைய ஏழாவது குழந்தை உரோகிணியிடம் போய்விட்டது," என்றார்.

அவ்விஷயங் கேட்டதும் கம்ஸன் பல்லை நறநற என்று கடித்து, அடக்க முடியாத கோபங் கொண்டு, "ஓ! அப்படியா செய்தான் வசுதேவன்! துஷ்டன்!

வஞ்சகன்!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டுப் பிறகு கோபம் ஆறி, "ஸ்வாமி, மேலும் சொல்லுங்கள்," என்றான்.

நாரதர், "கம்ஸா, கோபங் கொள்ளாதே; இனி ஆகவேண்டுவதைக் கவனி. உரோகிணியிடம் வளர்ந்தவன்தான் பலராமன். பலராமனும் கோபாலனும் அநேக காரியங்களை விளையாட்டாகவே செய்கிறார்கள்; நீ அனுப்பிய அசுரர்களையெல்லாம் கொன்றுவிட்டார்கள்; சிறுவர்களாயினும், மகா சாமர்த்தியமுடையவர்கள். நான் சொல்லிவிட்டேன். நீ அவர்களிடமிருந்து தப்பும் உபாயத்தைத் தேடிக்கொள்," என்று சொல்லிப் போய்விட்டார்.

# 10. கம்ஸன் சூழ்ச்சி

கம்ஸன் உடனே வசுதேவனை வரவழைத்து, அவனை வாயில் வந்தபடியெல்லாம் திட்டிப் பயமுறுத்தி, முடிவில் கொல்லவும் முயற்சி செய்தான்; பிறகு பலராமனையும் கோபாலனையும் கொல்வதற்கு வேண்டிய ஆலோசனை செய்தான்.

அவன் சபையில் அக்குரூரர் என்ற ஒருவர் இருந்தார். அவர் மகா நீதிமான்; அறிவாளர்; சகல சாஸ்திரங்களையும் ஓதி உணர்ந்தவர். அவரைக் கம்ஸன் வரவழைத்துச் செய்தியெல்லாம் சொல்லி, "பலராமனையும் கோபாலனையும் மறு மாதத்தில் நடக்கப் போகும் தநுர் யாக மகோற்சவத்திற்கு அழைத்து வாருங்கள். அவர்களை நான் நம் மல்லர்களோடு மல் யுத்தம் செய்ய விட்டு வதம் செய்வேன். இல்லாவிட்டால், குவலயாபீடம் என்கிற யானையை ஏவி அவர்களைக் கொல்வேன்," என்றான்.

அக்குரூரர் பெரியவரானதால், நடக்கப்போகும் சங்கதி அவருக்குத் தெரியும். ஆகையினால், அவர் வேறு பேசாமல், "அப்படியே செய்வோம்; இதற்கென்ன ஆலோசனை!" என்று சொன்னார். கம்ஸன் அவர் சொன்னதைக் கேட்டுத் தன் பகைவர்களைக் கொன்றுவிட்டதாகவே எண்ணிச் சந்தோஷமடைந்தான்.

# 11. கேசி வதை

அதற்குள் அவனுக்கு வேறோர் ஆலோசனை தோன்றியது. அவனுக்கு அடங்கிய கேசி என்ற அசுரனொருவன் இருந்தான். அவன் பிருந்தாவனத்திலேயே வசித்து வந்தான். அவனைக் கம்ஸன் தூது அனுப்பி வரவழைத்துப் பலராமனையும் கோபாலனையும் கொல்லும்படி அவனுக்குக் கட்டளையிட்டான். அந்தத் துஷ்டன் ஒரு பெரிய குதிரை உருவங்கொண்டு பிருந்தாவனத்திற்குப் போய், அந்த ஆயர் பாடி நடுங்கும்படி ஒரு தரம் கனைத்தான்; பூமியிலே செந்தூளி கருந்தூளி பறக்கும்படி குதித்துக்குதித்து இங்குமங்கும் ஓடினான். அந்தக் குதிரை மயிர் சிலிர்த்து நிமிர்வதைக் கண்டவர்களெல்லாம் பயந்து நடுங்கினார்கள்.

அவ்வாறு அசுரன் செல்லவே ஆயர்கள் பயந்து, "கிருஷ்ணா! கோபாலா! தாமோதரா!" என்று கூவி அழைத்தார்கள்; "எங்களைக் காத்தருள வேண்டும்!" என்று கைகூப்பி வணங்கினார்கள்.

கோபாலன், "ஆயர்களே, நீங்கள் அஞ்சவேண்டா. இஃது அசுரப் பயல்களின் வேலை; நான் தெரிந்துகொண்டேன். முன் வந்தவர்களெல்லாம் எந்தக் கதியை அடைந்தார்களோ, அந்தக் கதியை இந்தப்

பயலுக்கும் காட்டுகிறேன். ஆயுள் முடிந்தவன்தான் இந்தப் பிருந்தாவனத்திற்குள் நமக்கு விரோதியாய்ப் பிரவேசிப்பான்," என்று சொன்னான். எல்லோரும் கிருஷ்ணனைப் புகழ்ந்து துதித்தனர்.


கோபாலன் வீரவேசத்துடன் அந்த அசுரனிடம் போய், அவனை எதிர்த்தான். "வா வா ! அடா! வா ! உன்னை நானறிவேன். நீ ஏன் துள்ளுகிறாய்? சாகவந்த மூடன் நீ. உன் கனைப்பையும் உன் ஓட்டத்தையும் இதோ அடக்குகிறேன் ! வா வா !" என்று அழைத்தான்.

அந்தக் குதிரை கனைத்துக்கொண்டும் குதித்துக்கொண்டும் கோபாலனிடம் வந்து வாயைத் திறந்து கடிக்க முயன்றது. கோபாலன் சிறிதும் அஞ்சாமல், தன் கையை மடக்கிக்கொண்டு, அதன் வாயில் 'படீர்' என்று ஒரு குத்து விட்டான். அதன் பற்கள் உடனே கலகலவென்று உதிர்ந்தன. அதன் வாயிலிருந்து இரத்தம் குபுகுபு என்று பெருகியது. உதடுகள் பிளந்து போயின; கண்கள் பிதுங்கின; வாயிலிருந்து இரத்தத்தோடு நுரையும் வெளியே வந்தது; கால்கள் பூமியில் மடங்கின ; ஆகவே, அஃது ஓய்ந்து விழுந்தது. கிருஷ்ணன் அதனை இரு பிளவாகப் பிளந்தெறிந்து, வீர கர்ச்சனை செய்தான்.

ஆயர்கள் கிருஷ்ணனைச் சூழ்ந்துகொண்டார்கள். கிருஷ்ணன் சிறிதும் ஆயாசமில்லாமல் புன்சிரிப்புச்

சிரித்துக்கொண்டு நின்றான். அதைக் கண்ட யசோதையும் நந்த கோபனும் பரமானந்தம் அடைந்தார்கள். "இனி நமக்கு நமனுடைய அச்சம் இல்லை," என்று ஆயர் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டனர்.

அப்பொழுது நாரதர் ஆகாயத்திலிருந்து, "ஏ! கிருஷ்ணா, கோபாலா, உன் திறமையை நான் இங்கு இருந்தே பார்த்துக்கொண்டிருந்தேன். கேசி என்கிற அசுரனே இப்போது குதிரை ரூபங் கொண்டு வந்தவன். அவனை நீ விளையாட்டாகவே கொன்றுவிட்டாய். சந்தோஷம்! மிகவும் கொடியவனான அவனை நீ ஒழித்தாய். ஆதலால், உனக்குக் கேசவன் என்னும் பெயர் இனி விளங்கும். நீ நீடூழி வாழக்கடவாய். நான் போய் வருகின்றேன்," என்று கூறிவிட்டுப் போனார். அச்சொல் கேட்ட ஆயர்கள் ஆச்சரியம் அடைந்து, கிருஷ்ணனைப் பார்த்தபடியே இருந்து, அவன் விடை கொடுக்கப் பிரிந்தார்கள்.



# 12. மதுரைக்குச் சென்றது

கம்ஸன் முன்னிட்ட கட்டளைப்படி அக்குரூரர் பிருந்தாவனம் வந்து பலராம கிருஷ்ணர்களைப் பசுத் தொழுவத்திலே கண்டார். கிருஷ்ணன் கன்றுகளுக்கு நடுவே நின்றுகொண்டிருந்தான். அவனுடைய கண்கள் மலர்ந்த செந்தாமரையைப் போல இருந்தன. மார்பிலே ஸ்ரீவத்ஸம் ஆகிய மறு பிரகாசித்தது. கிருஷ்ணனைக் கண்ட அக்குரூரர் என்றும் அடையாத சந்தோஷமடைந்தார்; "இன்று நல்ல நாள்! நான் புண்ணியம் செய்தவன்! எனக்கு இனி என்ன குறைவு! இந்த அருமையான தரிசனம் யாருக்குக் கிடைக்கும்!" என்று எண்ணிக்கொண்டே கிருஷ்ணனிடம் போய் வணங்கினார்; அவன் பக்கத்தில் இருந்த பலராமனையும் வணங்கினார். கிருஷ்ணனும் பலராமனும் அவரைக் கண்டு வணங்கி, வரவேற்றுத் தம் வீட்டுக்குள் அழைத்துப்போய் உண்டி முதலியன கொடுத்து உபசரித்தனர்.

அப்பால் அக்குரூரர் கோபாலனிடம் கம்ஸன் வசுதேவனை நிந்தித்ததையும் அவன் கொண்ட எண்ணத்தையும் சொன்னார்.



5943a

கோபாலன், "இவையெல்லாம் எனக்குத் தெரியும். அவனைச் செய்ய வேண்டியதைச் செய்து அடக்குவேன்," என்று சொல்லி, மறு நாள் அவரோடு மதுரைக்குப் புறப்பட்டான். பலராமனும் அவனோடு போனான். வேறு சில இடையர்களும் பின்தொடர்ந்தார்கள். இவ்வாறு கிருஷ்ணன் மதுரைக்குப் புறப்பட்டதைப் பார்த்து இடைச்சியர் எல்லோரும் வருத்தப்பட்டனர்; "கம்ஸன் இந்தச் சிறுவர்களை என்ன செய்வானோ!" என்று பயந்தனர். கோபாலனும் பலராமனும் சிரித்துக்கொண்டும், வீரியம் பேசிக்கொண்டும் அக்குரூரருடைய இரதத்தில் ஏறினார்கள். அதைக் கண்டோர், "இவர்கள் வீரர்கள்; இவர்களிடம் கம்ஸனுடைய தந்திரம் பலியாது," என்று வியந்து பேசிக்கொண்டனர்.

பின்பு இரதம் சென்றது. வெகு விரைவில் அவர்கள் மதுரையை அடைந்தார்கள். மதுரை நகரின் அருகே சென்றதும் அக்குரூரர் பலராம கிருஷ்ணர்களைப் பார்த்து, "நான் இப்பொழுது கம்ஸனுக்குப் பயப்படுகிறேன். நீங்கள் இரதத்திலிருந்து இறங்கிக் கால் நடையாக நடந்து செல்லுங்கள். வசுதேவர் வீட்டுக்கு முதலிலே போகாதீர்கள். அப்படிப் போவீர்களானால், கம்ஸன் அவரைத் துன்பப்படுத்துவான்," என்றார்.

கிருஷ்ணனும் பலராமனும் இரதத்திலிருந்து இறங்கி, நகரத்துக்குள் பிரவேசித்து, ஒரு தெரு வழியே வெகு உற்சாகத்தோடு நடந்தார்கள்; அங்கே ஒரு வண்ணானைக் கண்டார்கள்; அவனை உடுத்துக்கொள்ளத் துணி வேண்டுமென்று கேட்டார்கள். அவன் கம்ஸனுடைய ஆதரவிலிருந்தவன். ஆதலால், அவர்களுக்குத் துணி கொடுக்காமல், "அடா பால்களா, போங்கள்!" என்று சொல்லிக்கொண்டே நடந்தான்.

பலராமனும் கோபாலனும் அவனைக் கீழே தள்ளிவிட்டு, அவனிடமிருந்த துணிகளை எடுத்துச் சிறப்பாக உடுத்துக்கொண்டார்கள். பிறகு அவர்கள் பூமாண்டி வீட்டுக்குப் போய், அவனைப் பூக்கள் கேட்டார்கள். அவன் அவர்களுடைய மகிமையை அறிந்தவன்; ஆதலால், அவர்களுக்கு வேண்டிய மாலைகளைக் கொடுத்து அலங்காரம் செய்துகொள்ளச் சொன்னான். அவற்றைப் பெற்ற கோபாலன் அவனை வாழ்த்தினான்.

அப்பால் அங்கிருந்து அவர்கள் புறப்பட்டு இராச வீதியில் சந்தோஷமாக நடந்தார்கள். அங்கே ஒரு கூனி சந்தனக் கிண்ணத்தைக் கையில் ஏந்திக்கொண்டு எதிரே வந்தாள். பலராம கிருஷ்ணர்கள் அவளிடம் அந்தச் சந்தனத்தைக் கேட்டார்கள். அவள் அவர்களிடம் அன்பு கொண்டு அவர்களுக்குச்


சந்தனம் கொடுத்தாள். அந்தச் சந்தனத்தை இரு-
வரும் பூசிக்கொண்டனர். கிருஷ்ணன் அவளுடைய-
கூனை நிமிர்த்தி, அவளை அழகிய பெண்ணாக்கினான்.
அவள் சந்தோஷமாய்க் கிருஷ்ணனை வாழ்த்திக்-
கொண்டே வீடு போனாள்.

இப்படிப்பட்ட திவ்ய அலங்காரத்துடனே
கோபாலன் பலராமனோடு ஆயுதச்சாலைக்குப் போ-
னான். அங்கிருந்த ஒரு வில்லைக் கிருஷ்ணன் எடுத்து
வளைத்து நாணேற்றினான். அது படீரென்று முறிந்-
தது. அந்தச் சத்தம் மதுரை நகர் எங்கும் கேட்டது.
அப்பொழுது அந்த ஆயுதச் சாலைக் காவலாளிகள்
அவர்களை எதிர்த்தார்கள். அவர்களையெல்லாம் இரு-
வரும் கொன்றுவிட்டு, அங்கிருந்து அப்பால் போ-
யினர்.

# 13. குவலயாபீடத்தைக் கொன்றது

கோபாலன் ஒடித்த வில்லின் ஓசை கம்ஸனுக்குக் கேட்டது. அவன் அக்குரூரர் பலராம கிருஷ்ணர்களோடு வந்துவிட்டார் என்பதைத் தெரிந்துகொண்டான்; ஆகையினால், உடனே சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களை வரவழைத்து, "பலராம கிருஷ்ணர்களென்கிற நம் பகைவர்கள் வந்துவிட்டார்கள். அவர்களை நீங்கள் எவ்வகையிலேனும் நியாயம் அநியாயம் என்பதைப் பாராமல் கொன்றுவிடவேண்டும். இந்தக் காரியத்தை நீங்கள் முடித்தால், உங்களுக்கு வேண்டுவன யாவும் தருவேன்," என்றான். அவர்கள், "அப்படியே செய்கிறோம்," என்று சொன்னார்கள்.

கம்ஸன் சந்தோஷப்பட்டு மறு நாள் மல் யுத்தம் நடத்தத் தீர்மானித்தான். அந்தப்படியே போர்க்களம் தயாரிக்கப்பட்டது. மறு நாள் அங்கு மக்கள் கூடினார்கள். பிருந்தாவனத்திலிருந்து நந்த கோபன் முதலானவர்களும் வந்து அங்கே வீற்றிருந்தார்கள். வசுதேவனும் அக்குரூரரும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். தேவகி, யசோதை, உரோகிணி


S.BRAHMA

முதலியவர்களும் பெண்களுக்கு நடுவே உட்கார்ந்திருந்தார்கள். சாணூரன் முஷ்டிகன் ஆகிய இருவரும் மற்போருக்குத் தயாராய் இருந்தனர்.

அவ்வாறிருந்த சபையின் வாயிலுக்குக் கோபாலனும் பலராமனும் சிரித்துக்கொண்டு பயமில்லாமல் சென்றார்கள். சென்ற அவர்கள்மேல் யானையை விட்டுக் கொல்லும்படி கம்ஸன் முன்னமே பாகனுக்குக் கட்டளை இட்டிருந்தான். அதனால், அந்தப் பாகன் வாசலில் பலராம கிருஷ்ணர்களுக்காகக் காத்துக்கொண்டு இருந்தான். அவன் அவர்களைக் கண்டதும் குவலயாபீடம் என்ற யானையை அவர்கள்மீது ஏவினான்.

அந்த யானை வெகு வேகமாய் அவர்களை எதிர்த்து வந்தது. அப்பொழுது பலராமன், "கிருஷ்ணா, கவனித்துக்கொள்," என்றான். கிருஷ்ணன், புறத்தைத் தட்டிக்கொண்டு அதன் எதிரே நின்று, "வா வா !" என்று அழைத்து, அந்த யானை வந்ததும் ஒரு சத்தம் செய்தான். அந்த யானை அஞ்சிப் பின்னே சென்றது. உடனே அதன் துதிக்கையைப் பிடித்து இழுத்துக் கரகரவென்று சுழற்றினான்; அந்த யானையின் கொம்புகளின் நடுவே நின்று சற்று நேரம் விளையாடினான். எல்லோரும் பார்த்து, 'இது என்ன மாயம் ! இது மனிதனுடைய செய்கையா !' என்றெண்ணி ஆச்சரியப்பட்டனர்.

பிறகு கிருஷ்ணன் தன் வலக் கையினால் அந்த யானையின் இடக் கொம்பைப் பிடுங்கி அந்தப் பாகனை ஓரடி அடித்தான். அதனால், பாகன் தலை உடைந்து கீழே விழுந்தான். அதற்குள் பலராமன் அந்த யானையின் வலப் பக்கத்துக் கொம்பைப் பிடுங்கிப் பக்கத்திலிருந்த யானைக் காவலரை அடித்துக்கொன்றான். பிறகு வேகமாக ஓடித் தாவிக் குதித்துத் தன் காலால் யானையின் மத்தகத்தில் ஓர் உதை உதைத்தான். அப்பொழுது அந்த யானை கீழே விழுந்து இறந்தது.

# 14. கம்ஸன் வதை

இப்படி யானையைக் கொன்றதும் பலராம கிருஷ்ணர் இருவரும் சிங்கக் குட்டிகள் போலச் சபையிலே பிரவேசித்தனர். அவர்களுடைய உடம்பெங்கும் யானையின் இரத்தம் தோய்ந்திருந்தது. அதுவும் அவர்களுக்கு ஓர் அழகாயிருந்தது. அது கண்டு பலர் ஆச்சரியப்பட்டனர். "இச்சிறுவர்களையா இப்பெரிய மல்லர்களை எதிர்த்துப் போர் புரியும்படி செய்வது! இஃது என்ன அநியாயம்!" என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்.

சபைக்கு வந்த பலராமனும் கிருஷ்ணனும் இடுப்புத் துணியை இழுத்து வரிந்து கட்டிக்கொண்டு, பூமி அதிரும்படி குதித்தார்கள். பிறகு கிருஷ்ணன் சாணூரனோடு மல்லுக்கு நின்றான். பலராமன் முஷ்டிகனோடு நின்றான். எல்லோரும், "என்ன கேடுகாலத்திற்கு இந்த மல் யுத்தம் நேர்ந்திருக்கிறதோ! ஒன்றுந் தெரியவில்லையே!" என்று நடுங்கினர்.

கிருஷ்ணன் சாணூரனோடு எந்த எந்த வகையில் மல் யுத்தம் செய்யவேண்டுமோ, அந்த அந்த வகையே செய்து வந்தான். வரவரச் சாணூரனுக்கு

வலுக் குறைந்தது. அதனால், அவன் களைப்படைந்தான். அந்தச் சமயத்தில் கம்ஸன் பயந்தான். அவனுக்கு உற்சாகம் குறைந்தது. இப்படியே பலராமனும் முஷ்டிகனைச் செய்தான். இருவரும் இப்படிக் களைப்படையவே கம்ஸன் கவலையுற்றுப் பெருமூச்செறிந்தான். அச்சமயம் கிருஷ்ணன் சாணூரனை இழுத்துக் கீழே தள்ளிக் கொன்றான். பலராமனும் முஷ்டிகனை அப்படியே கொன்றான்.

என்ன செய்வான் கம்ஸன்! கடுங்கோபங் கொண்டான்; சண்டையிலே தேர்ச்சி பெற்ற சிலரைக் கூப்பிட்டு, "இந்த நந்த கோபனைப் பிடித்துத் தளை இடுங்கள்," என்றான். "வசுதேவனைப் பிடித்துக் கொண்டுபோய் வாலிபருக்குச் செய்யத்தகும் தண்டனையைச் செய்யும்படி சொல்லுங்கள்," என்றான்.

இப்படிக் கம்ஸன் கட்டளை இட்டதைப் பார்த்த கிருஷ்ணன், சிரித்துக்கொண்டே வெகு வேகமாய் ஓடி, அவன் வீற்றிருந்த ஆசனத்திலே குதித்து, அவன் முடி கீழே விழும்படி அவன் தலை மயிரைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளி, அவன்மேல் தான் உட்கார்ந்து அழுத்தினான். அதனால் கம்ஸன் மூச்சுத் தடுமாறி உயிர் நீங்கினான்.

இப்படிக் கம்ஸன் இறந்ததும், அவனுடைய தம்பி சுதாமா என்பவன் மார்பைத் தட்டிக்கொண்டு ஓடிவந்தான். அவனைப் பலராமன் குத்திக்கொன்றான்

இப்படி இந்தப் பாதகர்கள் இறக்கவே, எல்லோரும் பலராம கிருஷ்ணர்களைக் கொண்டாடினர்; பூமழை பொழிந்து, புகழ்ந்து, இருவரையும் வாழ்த்தினர். பலவாத்தியங்கள் முழங்கின. பலராம கிருஷ்ணர் இருவரும் சந்தோஷத்துடன் ஓடி, வசுதேவனையும் தேவகியையும் பணிந்தனர். வசுதேவன் இரண்டு குமாரர்களையும் கட்டித் தழுவி முத்தமிட்டு, " என்னை வாழ்விக்க வந்த புத்திர இரத்தினங்களே, நீங்கள் நீடூழி வாழக்கடவீர்கள்!" என்று வாழ்த்தினன். அப்படியே தேவகியும் வாழ்த்திச் சந்தோஷமடைந்தாள்.

கோபாலன் தன் தாயையும் தந்தையையும் பார்த்து, "உங்களைக் காண நாங்கள் பல நாட்களாய் ஆவல் கொண்டிருந்தோம்; கம்ஸனுக்கு அஞ்சி இங்கு வராமலிருந்துவிட்டோம்; தாய் தந்தையர்களுக்குப் பணிவிடை செய்யாத காலம் வீணனதே ஆகும்; பெற்றோருக்கும், குருவுக்கும், தேவர்களுக்கும் பணிவிடை செய்வதிலே செலவழியும் காலந்தான் பயனுடையதாகும். அவ்வாறு செய்யாமையால், நாங்கள் பிழையுடையவர்கள் ஆனோம். எங்களை மன்னியுங்கள்," என்று சொல்லிப் பலராமனோடு பணிந்தான்.

பிறகு இருவரும் அங்குள்ள யாதவப் பெரியோர்களை வணங்கினர். அவர்கள் சந்தோஷத்தோடு

ாழ்த்தினார்கள். கிருஷ்ணன் எல்லோரும் மகிழும்-
டி கம்ஸனுடைய தந்தையைச் சிறையிலிருந்து
டுவித்தான்; அவனை மதுராபுரிக்கு அரசனாக்கி-
ன். எல்லோரும் அவரவர் இருப்பிடம் சென்ற-
ர். பலராமனும் கோபாலனும் எல்லோருக்கும்
ன்மையைச் செய்துகொண்டு சுகமாய் வாழ்ந்து
ந்தார்கள்.

59432a



Printed at the Liberty Press, G.T., Madras.